**உதவி அமர்வு நீதிமன்றம்/சார்பு நீதிமன்றம், பத்மநாபபுரம்**

**முன்னிலை: திரு. K. மாரியப்பன், பி.ஏ., பி.எல்.,**

**உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி, பத்மநாபபுரம்**

2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22–ம் நாள் புதன்கிழமை

<u>அமர்வு வழக்கு எண்.270/2023</u>

<u>CNR- TNKK-000808-2023</u>

| | | |
|---|---|---|
| தமிழக அரசுக்காக | : | காவல் ஆய்வாளர்,<br>திருவட்டார் காவல் நிலையம்.<br>குற்ற எண்.138/2023 |
| எதிரியின் பெயர் | : | ரவீந்திரன் நாயர் (வயது 63)<br>த/பெ.கோபாலகிருஷ்ணன்<br>அப்பட்டுவிளை<br>தக்கலை. |
| அரசு தரப்பில் எதிரியின் மீது முறையிடப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | அரசுத்தரப்பில் எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c), 5(1)(d), 3(1) ன் படி குற்றம் முறையிடப்பட்டுள்ளது. |
| எதிரியின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் | : | எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c), 5(1)(d), 3(1) ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது |
| நீதிபதியின் முடிவு | : | எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c), 5(1)(d), 3(1) ன் படி குற்றவாளி இல்லை. |
| தீர்ப்புரை | : | எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c), 5(1)(d), 3(1) ன் படி குற்றவாளி அல்ல என முடிவு செய்யப்பட்டு எதிரியை கு. வி. மு. ச. பிரிவு. 235 (1) படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த வழக்கு என் முன்பு 22.04.2026 தேதியன்று இறுதியான விசாரணைக்கு வந்த போது குற்றமுறையிடுபவர் தரப்பில் கூடுதல் அரசு குற்றத்துறை வழக்குரைஞர் திரு. T. மைக்கேல் ரதீஸ் அவர்கள் ஆஜராகியும், எதிரி சார்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், அரசு தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்த வழக்கு எனது பரிசீலனையின் கீழ் இருந்து வந்தபின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்:

**<u>தீர்ப்புரை</u>**

எதிரி 17.09.2021ம் தேதி சாட்சி அனிற்றாவிற்கு சொந்தமான முளகுமூடு அஞ்சல், நீங்காரவிளையில் உள்ள கதவு எண். 28-182 எண் கொண்ட வீட்டை வாடகைக்கு மாத வாடகை ரூ.5000/- முன்பணம் ரூ-40,000/-க்கு பேசி 11 மாத காலத்திற்கு வாடகை ஒப்பந்த பத்திரம் தயார் செய்து கொடுத்து வாடகைக்கு குடியிருந்து மாதவாடகை பணம் மாதந்தோறும் Google Pay மூலம் வீட்டின் உரிமையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார். எதிரி அதிக பணம் சம்பாதிக்க வேண்டுமென்று ஆசைப்பட்டு பாலியல் தொழில் செய்யும் பெண்களின் போன் நம்பர்களை நண்பர்கள் மூலம் வாங்கி வைத்துக்கொண்டு வெளியூர்களில் இருந்து பெண்களை வரவழைத்து வீட்டில் தங்க வைத்து பணக்கார வாலிபர்களை வரவழைத்து அவர்களிடம் இருந்து பணங்கள் பெற்று நீரோத் கொடுத்து வீட்டில் தங்கி இருக்கும் பெண்களிடம் பாலியல் தொழில் செய்ய வைத்து பணம் சம்பாதித்து வந்தார். 19.06.2023ம் தேதி 14.00 மணிக்கு திருவட்டார் காவல்நிலைய சார்பு ஆய்வாளரிடம் சாட்சி 3 காவல்நிலையம் வந்து கொடுத்த தகவலின் படி SI. தலைமை காவலர் பெண் முதல்நிலை காவலர்கள்

ஆகியோர்கள் சகிதம் 14.30 மணிக்கு முளகுமூடு நீங்காரவிளையில் சாட்சி 2 அனிற்றா என்பவருக்கு சொந்தமான கதவு எண். 28–182 வீட்டின் முன்பு செல்லும் போது எதிரி பாலியல் தொழிலுக்கு வாடிக்கையாளர்களை வரவழைத்து எதிர்பார்த்து கொண்டிருந்தனர். எதிரியின் வீட்டை சோதனை செய்த போது இருபெண்களை போண் மூலம் வரவழைத்து நீங்காரவிளையில் உள்ள கதவு எண். 28–182 எண்ணுள்ள வீட்டில் தங்க வைத்து பணக்கார வாலிபர்களிடம் பாலியல் தொழில் செய்ய இரண்டு பெண்களும் நீரோத்துகள் வைத்து அரைகுறை ஆடைகளுடன் வாசனை திரவியங்கள் பூசி வாடகை வீட்டில் வைத்து பாலியல் தொழில் செய்த குற்றத்திற்காக எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c). 5(1)(d), 3(1) ன் படி திருவட்டார காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதலில் பரிசீலனை செய்த பத்மனாபபுரம் நீதித்துறை நடுவர், மேற்படி குற்ற இறுதி அறிக்கையை முதல் விசாரணை பதிவேட்டு வழக்கு எண். 52/2023 என கோப்பிற்கு எடுத்து, இவ்வழக்கின் எதிரிக்கு இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கி பின்னர் இவ்வழக்கின் ஆவணங்களை பரிசீலனை செய்து எதிரியின் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களானது அமர்வு நீதிமன்றத்தால் விசாரிக்கத்தக்க குற்றம் என்பதால் இவ்வழக்கினை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவிலுக்கு கு.வி.மு.ச.209(அ) பிரிவின் கீழ் விசாரணைக்காக சமர்ப்பித்துள்ளார்.

3. மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில், நீதிமன்றத்தில் இவ்வழக்கானது அமர்வு வழக்கு எண்.270/2023 என கோப்புக்கு எடுக்கப்பட்டு மேல் விசாரணைக்காக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

4. இந்நீதிமன்றத்தில் எதிரி ஆஜரான போது இருதரப்புகளை கேட்டும், அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்தும், எதிரி குற்ற இறுதி அறிக்கையில் கண்டுள்ள குற்றங்களை புரிந்திருக்க கூடும் என்று அனுமானிக்க முதல் நிலையில் ஆதாரங்கள் இருந்ததால் எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c). 5(1)(d), 3(1) ன் படி குற்றச்சாட்டுகள் வனையப்பட்டு அதை விளக்கி கூறி வினவிய போது எதிரி குற்றச்சாட்டுகளை மறுத்தார். எனவே இவ்வழக்கு அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

5. இவ்வழக்கில் அரசு தரப்பில் 1 முதல் 8 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் 1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6. **<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>**

அ.சா.1 ரமேஷ் தனது சாட்சியத்தில், இதற்கு முன்னர் திருவட்டார் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது 19.06.2023ம் தேதி 14.00 மணிக்கு தான் நிலைய பொறுப்பில் இருக்கும் போது நெய்யூர், மேல்கரை காசிநாடார் மகன் சிவகுமார் என்பவர் கொடுத்த தகவல் படி தலைமைக்காவலர் 227 திரு.சைலின் ஜெயசுபின் பெண் முதல்நிலை காவலர் ஷீஜா, பெண் முதல்நிலை காவலர் ராகி ஆகியவர்களுடன் 14.30 மணிக்கு முளகுமூடு, மிங்காரவிளை அனிதா என்பவர் வீட்டிற்கு முன்பாக சென்று அங்கு நின்று கொண்டிருந்த ரவீந்திர நாயர் என்பவரை விசாரித்து மேற்படி வீட்டை சோதனை இட்ட போது அந்த வீட்டில் ஷோபா மோள், சக்தி, என்ற இரு இளம்பெண்கள் அறையில் அரைகுறை ஆடைகளுடன் இருந்ததாகவும் அவர்களை விசாரணை செய்த போது ரவீந்திரன் நாயர் மேற்படி பெண்களை வைத்து விபசார தொழில் செய்து பிழைப்பு நடத்தி வருவதாக கூறி குற்றத்தை ஒப்புக்கொண்டதாகவும், மேற்படி ரவீந்திரன் நாயரை 15.00 மணிக்கு கைது செய்து அவரை எவ்வித

துன்புறுத்தலும் இன்றி அவராக கொடுத்த ஒப்புதல் வாக்குமுலத்தை 15.30 மணி வரை தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் போலீசார் சாட்சிகளாகிய தலைமைக்காவலர் சைவின் ஜெபசுபின், பெண் முதல்நிலைகாவலர்கள் ஷீஜா, ஆகியவர்கள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் எதிரி ஆஜர் படுத்திய நான்கு ஆணுறை பாக்கெட்டுகளை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும், அந்த அத்தாட்சி வழக்குச்சொத்து, எதிரி மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் சகிதம் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 138/2023 பிரிவுகள் 3(1), 4(2), 5(2) (D) ITP Act மற்றும் பிரிவு 370(2) இ.த.ச படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ததாகவும், அசலை நீதிமன்றத்திற்கு அனுப்பி விட்டு ஒரு நகலை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும், ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.1 என்றும், அத்தாட்சி அ.சா.ஆ.2 என்றும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அ.சா.2 அனிற்றா தனது சாட்சியத்தில் இவ்வழக்கின் எதிரியான ரவீந்திரன் நாயர் என்பவரை தெரியும் என்றும், தங்களுக்கு சொந்தமாக ரீங்காரவிளையில் கதவு எண் 28/182 என்ற வீடு சொந்தமாக இருந்ததாகவும் அதனை 17.09.2021ம் தேதி எதிரி வாடகைக்கு கேட்டதாகவும், வாடகை ரூ.5,000/– முன்பணம் ரூ.40,000/– பெற்றுக்கொண்டு ரவீந்திரன் நாயருக்கு அந்த வீட்டை வாடகைக்கு கொடுத்ததாகவும் தன்னிடம் காட்டப்படும் வாடகை ஒப்பந்தங்கள் தனக்கும், ரவீந்திரன் நாயருக்கும் ஏற்பட்ட வாடகை ஒப்பந்தங்கள் தான் என்றும், அது அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 என்றும், 29.06.2023ம் தேதி ரவீந்திரன் நாயர் விபசார வழக்கில் கைதாகி போனது என்று தகவல் கிடைத்ததாகவும் தான் உடனடியாக அந்த வீட்டை காலி செய்து தன் வசம் பெற்றுக்கொண்டதாக சாட்சியம் அளித்துள்ளார்.

8. அ.சா.3 சைலின் ஜெப சுபின் தனது சாட்சியத்தில் 19.06.2023ம் தேதி திருவட்டார் காவல்நிலையத்தில் தலைமைக்காவலராக பணியாற்றி வந்த போது நெய்யூரை சேர்ந்த சிவகுமார் என்பவர் சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களிடம் முளகுமூடு அருகே உள்ள நிங்காரவிளை என்ற இடத்தில் எதிரி ரவீந்திரன் நாயர் விபச்சார தொழில் செய்வதாக தகவல் சொன்னதாகவும் பின்னர் இது குறித்து காவல் ஆய்வாளருக்கு தகவல் தெரிவித்து விட்டு உதவி ஆய்வாளருடன் தானும், பெண்முதல்நிலை காவலர் திருமதி. ஷீஜா, திருமதி. ராகி ஆகியவர்கள் முளகுமூடு நிங்காரவிளை அனிதா என்பவரது வீட்டில் வைத்து விபச்சாரம் நடந்ததாக சொன்னதாகவும், அங்கு சென்ற போது ரவீந்திரன் நாயர் அனிதாவின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்ததாகவும் வீட்டினுள் சென்ற போது சக்தி மற்றும் ஷோபா ஆகிய இரு பெண்கள் அரைகுறை ஆடையுடன் இருந்ததாகவும் மேற்படி இருவரும் எதிரி அவர்களை வைத்து விபச்சார தொழில் செய்வதாக கூறியதாகவும் ரவீந்திரன் நாயர் விபச்சார தொழில் செய்வதை ஒப்புக்கொண்டதாகவும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அந்த வீட்டிலிருந்து 4 பாக்கெட் நீரோத் கைப்பற்றப்பட்டதாகவும் அத்தாட்சியில் தானும் முதல்நிலை காவலர் ஷீஜாவும் கையொப்பம் செய்ததாகவும் அந்த அத்தாட்சி அ.சா.ஆ.6 என்றும், சாட்சியம் அளித்துள்ளார்.

9. அ.சா.4 ஷீஜா தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது 19.06.2023ம் தேதி மதியம் 02.00 மணிக்கு சிவகுமார் என்பவர் நிலையம் வந்து நிங்காரவிளையில் அனிதா வீட்டில் விபச்சாரம் நடப்பதாக தகவல் சொன்னதாகவும் அங்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களுடன் சைலின் ஜெயசுபின், ராகி மற்றும் தான் சென்ற போது அனிதா வீட்டின் முன்பு எதிரி ரவீந்திரநாயர் நின்று கொண்டிருந்ததாகவும் அவரிடம் தகவல் சொல்லி வீட்டை சோதனை செய்ததாகவும் அப்போது வீட்டில் ஷோபா, சக்தி என்ற இருபெண்கள்

இருந்ததாகவும் அவர்கள் இருவரையும் விசாரித்த போது விபச்சாரம் செய்வதாக ஒப்புக்கொண்டதாகவும் எனவே, எதிரியுடன் சேர்த்து அந்த பெண்களையும் அழைத்து வந்ததாகவும் சோதனை செய்த வீட்டிலிருந்து 4 பாக்கெட் நீரோத் கைப்பற்றியதாகவும் அத்தாட்சியில் தானும் கையொப்பம் செய்ததாகவும், சாட்சியம் அளித்துள்ளார்.

10. அ.சா.5 ராகி தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றிய போது 19.06.2023ம் தேதி மதியம் 02.00 மணிக்கு சிவகுமார் என்பவர் நிலையம் வந்து நிங்காரவிளையில் அனிதா வீட்டில் விபச்சாரம் நடப்பதாக தகவல் சொன்னதாகவும் அங்கு சார்பு ஆய்வாளர் திரு. ரமேஷ் அவர்களுடன் சைலின் ஜெயசுபின், ஷீஜா மற்றும் தான் சென்ற போது அனிதா வீட்டின் முன்பு எதிரி ரவீந்திரநாயர் நின்று கொண்டிருந்ததாகவும் அவரிடம் தகவல் சொல்லி வீட்டை சோதனை செய்ததாகவும் அப்போது வீட்டில் ஷோபா, சக்தி என்ற இருபெண்கள் இருந்ததாகவும், அவர்கள் இருவரையும் விசாரித்த போது விபச்சாரம் செய்வதாக ஒப்புக்கொண்டதாகவும், எனவே, எதிரியுடன் சேர்த்து அந்த பெண்களையும் அழைத்து வந்ததாகவும், சோதனை செய்த வீட்டிலிருந்து 4 பாக்கெட் நீரோத் கைப்பற்றியதாக சாட்சியம் அளித்துள்ளார்.

11. அ.சா.7 பாலமுருகன் தனது சாட்சியத்தில், இதற்கு முன்னர் குலசேகரம் காவல் ஆய்வாளராக இருந்தபோது திருவட்டார் காவல்நிலைய பொறுப்பு காவல் ஆய்வாளராக பணியாற்றியதாகவும், அப்போது கடந்த 19.06.2023ம் தேதி திருவட்டார் காவல்நிலைய குற்ற எண்.138/2023 பிரிவுகள் 3(1), 4(2) (c), 5(1) (a) 5(1), (d). ITP Act மற்றும் பிரிவு 370(2) இ.த.ச படியான வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் நகலினை காவல் உதவி ஆய்வாளர் திரு. ரமேஷ் என்பவரிடமிருந்து புலன் விசாரணைக்காக பெற்றுக்கொண்டதாகவும் பின்னர்

16.45 மணிக்கு இந்த வழக்கின் சாட்சிகளான தலைமைக்காவலர் 227 சைலின் ஜெப சுபின், பெண் முதல்நிலை காவலர் திருமதி. ஷீஜா, பெண் முதல்நிலை காவலர் திருமதி. ராகி, சிவகுமார் ஆகியவர்களை காவல் நிலையத்தில் வைத்து தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் விசாரணையில் இந்த வழக்கின் சம்பவம் உண்மை என தெரிந்ததாகவும், பின்னர் இந்த வழக்கின் சம்பவ இடத்தில் 17.30 மணிக்கு சென்று சாட்சிகள் பிரிட்டோ, ஆர்ஷன் ஆகியவர்கள் முன்னிலையில் பார்வை மகஜர் அ.சா.ஆ.6, மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 தாயார் செய்ததாகவும் மேற்படி சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் பின்னர் காவல்நிலையம் வந்து இந்த வழக்கின் எதிரியான ரவீந்திரன் நாயர் என்பவரை காரணம் கூறி கைது செய்து நீதிமன்ற காவலுக்கு அனுப்பியதாகவும் பாதிக்கப்பட்ட பெண்களான சோபா மற்றும் சக்தி பெண்கள் விடுதியாளர் தங்கும் விடுதிக்கு பாதுகாப்பாக அனுப்பி வைத்ததாகவும் திருவட்டார் காவல்நிலையத்திற்கு புதிய ஆய்வாளர் பொறுப்பேற்றபடியால் வழக்கு கோப்பை அவரிடம் ஒப்படைத்ததாக சாட் சியம் அளித்துள்ளார்.

12. அ.சா.8 தனது சாட்சியத்தில் இதற்கு முன்னர் திருவட்டார் காவல்நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றிய போது நிலைய குற்ற எண். 138/2023 பிரிவுகள் 3(1), 4(2) (c), 5(1) (a) 5(1), (d). ITP Act மற்றும் பிரிவு 370(2) இ.த.ச படியான வழக்கை முந்தைய காவல் ஆய்வாளர் திரு. பாலமுருகன் அவர்கள் முதல் விசாரணை முடித்து தன்னிடம் ஒப்படைத்த வழக்கு கோப்பை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 29.07.2023ம் தேதி எதிரி பயன்படுத்தியதாக கூறப்படும் கதவு எண் 28/182 வீட்டின் உரிமையாளராக அனிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடமிருந்து ஒப்பந்த பத்திரம் பெற்றதாகவும், விசாரணையை முடித்து எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்ததாக சாட்சியம் அளித்துள்ளார்.

13. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து எதிரிக்கு எதிரான சங்கதிகள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1) (அ)–ன் கீழ் வினவியபோது எதிரி சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது.

14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்நீதிமன்றத்தில் எதிரி மீது இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதே ஆகும்.

15. ***<u>பிரச்சனைக்கான தீர்வு</u>*** ?.

அரசுத்தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தன்னுடைய வாதத்தின் போது, எதிரியானவர் முளகுமூடு அஞ்சல், நீங்காரவிளையில் உள்ள கதவு எண். 28–182 எண் கொண்ட வீட்டை அ.சா.2 அனிற்றா என்பவரிடமிருந்து மாதம் ரூ–5,000/– க்கு வாடகைக்கு எடுத்து அதில் பாலியல் தொழில் செய்வதற்காக பெண்களை வரவழைத்து வீட்டில் தங்க வைத்து வாலிபர்களை வரவழைத்து பாலியல் தொழில் செய்ய வைத்து பணம் சம்பாதித்து வந்தார். அதை தொடர்ந்து 19.06.2023ம் தேதி 14.00 மணிக்கு திருவட்டார் காவல்நிலைய சார்பாய்வாளர் அவர் போலிசாருடன் அந்த வீட்டில் சோதனை செய்த போது நெய்யாற்றின்கரை மரியாபுரத்தை சார்ந்த 33 வயது கொண்ட ஷோபாவையும், கரூர் மாவட்டம் கடம்பன்குறிச்சியை சார்ந்த 39 வயதுடைய தனலட்சுமி ஆகிய இரு பெண்களையும் வரவழைத்து அந்த வீட்டில் வைத்து பாலியல் தொழில் செய்ய நிரோத்துக்கள் வைத்திருந்தது கண்டறியப்பட்டு கைப்பற்றப்பட்டு ஆஜர்படுத்தப்பட்டதாகவும் எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அ.சா.1 முதல் அ.சா.8 வரையிலான சாட்சிகள் மூலமும் அ.சா.ஆ–1 முதல் அ.சா.ஆ–7 வரையிலான

ஆவணங்கள் மூலமும் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே எதிரிக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

16. எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தின் போது, திருவட்டார் காவல்நிலைய சார்பாய்வாளரான அ.சா.1க்கு ஒழுக்கக்கேடான போக்குவரத்து தடுப்பு சட்டப்படி சோதனை நடத்துவதற்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், 19.06.2023ம் தேதி எதிரி வாடகைக்கு இருந்ததாக கூறப்படும் நீங்காரவிளையில் உள்ள கதவு எண். 28-182 வீட்டில் எவ்வித அனுமதியும் இல்லாமல் நடத்தப்பட்ட சோதனை செல்லத்தக்கதல்ல என்றும், எதிரி ஒழுக்கக்கேடான போக்குவரத்து தடுப்பு சட்டப்படி குற்றச்சாட்டு புரிந்தார் என்பதற்கு எவ்வித அடிப்படை ஆவணங்களும் இல்லை என்றும், மேற்படி வீட்டில் எவ்வித விபச்சார தொழிலும் செய்யவில்லை என்றும், பாதிக்கப்பட்ட பெண்கள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், விபச்சார தொழில் நடந்தற்கான எவ்வித ஆவணங்களும் இல்லாத நிலையில் புள்ளி விவர கணக்கிற்காக போடப்பட்ட பொய் வழக்கு என்று வாதிட்டார்.

17. அரசுத்தரப்பு வழக்கின் படி இவ்வழக்கின் எதிரி நீங்காரவிளையில் கதவு எண். 28-182 எண் கொண்ட வீட்டை அ.சா.2 யிடம் இருந்து வாடகைக்கு எடுத்து அதில் இளம் பெண்களை தங்க வைத்து விபச்சார தொழிலில் ஈடுபடுத்தி லாபம் ஈட்டி வாழ்ந்து வந்தார் என்பதாகும். இது குறித்து பார்க்கும் போது 19.06.2023ம் தேதி மதியம் 2.30 மணியளவில் ஒழுக்கக்கேடான விபச்சார தொழில் நடத்தியது குறித்து விசாரணை செய்ய அ.சா.1க்கு அதிகாரம் உள்ளதா என்பது குறித்து பார்க்கும் போது, நமது மாண்புமிகு உயர்நீதிமன்றம் பின்வரும் வழக்கில்

***G. Justus Abraham vs State***

***https://indiankanoon. org/doc/175249304***

*13. At the outset, the contention of the counsel for the petitioner that the investigation officer in this case is incompetent to conduct the raid and therefore the entire case projected by the prosecution is vitiated cannot be countenanced. As rightly pointed out by the learned Government Advocate (Criminal side) as per G.O. Ms. No.618, Social Welfare Department dated 13.04.1987 issued by the State Government, every police officer appointed by the State, not below the rank of an Inspector of Police, are authorised to be the Special Police Officer for dealing with the offences under the Act inter alia to assist the Special Police Officer concerned. It is not disputed that PW1 at the time of the incident was holding the post of Inspector of Police and therefore, as per the aforesaid Government Order, he is competent to register the case and to cause arrest of the accused.*

என்று குறிப்பிட்டுள்ளது. எனவே 13.4.1987 தேதியிட்ட அரசாணை எண். 618 ன் படி அரசாணை ஒழுக்கக்கேடான போக்குவரத்து ( தடுப்பு ) சட்டம் படியான வழக்குகளை விசாரிக்க அனைத்து காவல்துறை அதிகாரிக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. ஆனால் நியமன அதிகாரி காவல்துறை ஆய்வாளர் படிநிலைக்கு குறையாத நபராக இருக்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கை பார்த்தது அ.சா.1 சார்பாய்வாளர். எனவே ஆய்வாளர் என்பதால் மேற்கொள்ளப்பட்ட சோதனையை பிரிவு 15 ஒழுக்கக்கேடான போக்குவரத்து தடை சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்பது தெரிய வருகிறது.

18. மேலும் ஒழுக்கக்கேடான போக்குவரத்து தடுப்பு சட்டப்படி ஒரு இடத்தை சோதனை செய்வதற்கு முன்னர் உரிய முறையில் ஆணை பெற்று அந்த இடத்தை சோதனை செய்ய வேண்டும். ஆனால் அதற்கு முன்னால் சோதனை செய்ய உத்தேசிக்கப்பட்ட இடத்திலிருந்து குற்றம் நிகழ்ந்த சுவடுகள் மறைக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது என்று அதிகாரி கருதினால் சோதனையை

ஆணையின்றி அந்த இடத்தை சோதனையிடலாம். ஆனால் சோதனையானது 2 மதிப்பு மிக்க நபர்களின் முன்னால் மேற்படி சோதனை செய்யப்பட வேண்டும். இவ்வழக்கில் அ.சா.1 அவரது சக காவலர்களான அ.சா.3, 4, 5, ஆகியோர் முன்னிலையில் மேற்படி சோதனை நிகழ்த்தியுள்ளார். எனவே அந்த சோதனை செல்லத்தக்க சோதனை இல்லை. மேலும் இளம் பெண்களை வைத்து பாலியல் தொழில் நடத்தி பணம் ஈட்டி வாழ்ந்து வத்தார் என்பதை காட்டவோ ? இவ்வழக்கின் எதிரி தரகு வேலை செய்பவர் என்பதை காட்டவோ ? அல்லது கூட்டிக்கொடுக்கும் தொழில் செய்ததை காட்டவே ? அரசுத்தரப்பில் பாதிக்கப்பட்டதாக கூறும் பெண்கள் யாரும் சாட்சியாக விசாரிக்கவில்லை. மேலும் மேற்சொன்ன முகவரியில் அன்றைய தினம் விபச்சாரம் நடந்தது என்பதை காட்டவும் எவ்வித சாட்சிய சான்றாவணங்கள் இல்லை. எனவே எதிரி இளம் பெண்களை கட்டாயப்படுத்தி பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி பணம் சம்பாதித்து வாழ்ந்து வந்தார் என்பதை காட்ட எவ்வித சாட்சிய சான்றாவணங்களும் இல்லை.

19. மேலும் இவ்வழக்கில் செய்யப்பட்ட சோதனைகளும் பிரிவு 14 மற்றும் 15 ஒழுக்கக்கேடான போக்குவரத்து தடை சட்டப்படி அயைவில்லை. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை விடுதலை செய்யலாம் என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, எதிரி மீது 1956 ம் ஆண்டு பாலியல் தொழில் தடுப்பு சட்டம் பிரிவு 4(2)(c). 5(1)(d), 3(1)படியான குற்றச்சாட்டுகள் அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்கி எதிரியை கு.வி.மு.ச. பிரிவு 235(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட தடயப்பொருளை மேல் முறையீடு அல்லது மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு அழிக்க வேண்டுமென்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்தாளரிடம் சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026–ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22 ஆம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K MARIAPPAN
Digitally signed by K MARIAPPAN
Date: 2026.04.25 16:59:52 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி
பத்மனாபபுரம்

**<u>இணைப்பு:–</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள் :–</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) | அ.சா.1 | – | திரு.ரமேஷ் |
| 2) | அ.சா.2 | – | திருமதி. அனிற்றா |
| 3) | அ.சா.3 | – | திரு. சைலின் ஜெப சுபின் |
| 4) | அ.சா.4 | – | திருமதி. ஷீஜா |
| 5) | அ.சா.5 | – | திருமதி. ராகி |
| 6) | அ.சா.6 | – | திரு. ஆர்சன் |
| 7) | அ.சா.7 | – | திரு. பாலமுருகன் |
| 8) | அ.சா.8 | – | திருமதி. ஜானகி |

**<u>அரசு தரப்பு சான்றாவணங்கள் ;</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | – | ஒப்புதல்வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| 2. | அ.சா.ஆ.2 | – | அத்தாட்சி |
| 3. | அ.சா.ஆ.3 | – | முதல்தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | – | வாடகை ஒப்பந்தங்கள் |
| 5. | அ.சா.ஆ.5 | – | வாடகை ஒப்பந்தங்கள் |
| 6. | அ.சா.ஆ.6 | – | அத்தாட்சி |
| 7. | அ.சா.ஆ.7 | – | பார்வை மகஜர் |
| 8. | அ.சா.ஆ.8 | .– | வரைபடம் |

**<u>அரசு தரப்பு சான்று பொருள்கள்</u>**

இல்லை

**<u>தடயப்பொருள்</u>**

1 - நீரோத்

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>**

– இல்லை –

**<u>எதிரி தரப்பு சான்றாவணங்கள்;</u>**

இல்லை

K MARIAPPAN Digitally signed by K MARIAPPAN Date: 2026.04.25 17:00:05 +0530

உதவி அமர்வு நீதிபதி/சார்பு நீதிபதி,

பத்மனாபபுரம்

PSC

Judgment

in S.C.No.270/2023

Dt. 22.04.2026.